
Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

19.06.2020 வெள்ளிக்கிழமை தொடர்புக்கு 076 584 2222



## இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடம்

### இரு அமைப்புக்களால் வெளியீடு

*கொழும்பு, ஜூன் 19*
இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டமும்
பக்.2

# இராணுவ மயமாக்கலால் பொருளாதாரம் மீளாது!

## ஜனாதிபதி கோத்தாபயவுக்கு மங்கள பதிலடி



கொழும்பு, ஜூன் 19
இராணுவ மயமாக்கலால் நாட்டின் பொருளாதாரத்தை ஒருபோதும் மீட்க முடியாது. கடந்த 7 மாதகால முறையற்ற ஆட்சியே இலங்கையின் பொருளாதாரத்தை முழுவதுமாகச் சீரழித்தது – என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நிதி அமைச்சரான மங்கள சமரவீர.
பக்.2

## சர்வதேச சூழ்ச்சியே 2015 ஆட்சி மாற்றம்

### மஹிந்த இப்படித் தெரிவிப்பு



*கொழும்பு, ஜூன் 19*
சர்வதேச மற்றும் உள்ளூர் சூழ்ச்சியின் விளைவாகவே 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எனினும் ஆட்சி மாற்றத்துக்கான பிரதிபலனை மக்கள் பெறவில்லை. இதனால் 2019ஆம் ஆண்டு மீண்டும் மக்கள் எம்மைத் தெரிவுசெய்த
பக்.2

### வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட

## 10 பேருக்கு கொரோனா

*வவுனியா, ஜூன் 19*
வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து
பக்.2

## அடுத்த வாரம் முதல் தியேட்டர்கள் திறப்பு

*கொழும்பு, ஜூன் 19*
நாட்டில் உள்ள அனைத்துத் திரையரங்குகளும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன. கொரோனாத் தொற்றுக் காரணமாக திரையரங்குகள் மறு அறிவித்தல் வரும் வரைக்கும் மூடப்பட்டிருக்கின்றன. கொரோனாத் தொற்று கட்டுக்குள்
பக்.2

### புதினம்? தெரியுமோ

**வீணைக்காரர்களுக்கு இப்ப போதாத காலம். முந்தியெண்டா தனிக்காட்டு ராஜாவா , அரசின் ஏகப் பங்காளியாக தேர்தலில வாக்குக்கேட்டினம். ஆனா இப்ப மும்முனைப் போட்டி. ஒரு பக்கம் கை, இன்னொரு**
பக்.2A



## எம்.பிக்களில் பலர் சமூகவிரோதிகளே!

### ரஞ்சன் ராமநாயக்க விளாசல்

*கொழும்பு, ஜூன் 19*
சமூக விரோதிகள் பலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர். அதிகாரத்தில் இல்லாதபோதே அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த நிலை
பக்.2

## வாரம் ஒருநாள் 'பற்றிக்' ஆடை!

### அரச அலுவலர்களுக்கு கட்டாயம்

*கொழும்பு, ஜூன் 19*
அரச அலுவலர்கள் வாரம் ஒருநாள் 'பற்றிக்' ஆடை கட்டாயம் அணிந்து வர வேண்டும் என்று
பக்.2

## மின்சாரம் தாக்கி தம்பதியர் சாவு!

*கொழும்பு, ஜூன் 19*
களுத்துறை, தொடங்கொட நெஹின்ன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அமைக்கப்பட்ட
பக்.2



## இயலாமையை மறைக்கவே ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு

### மஹிந்தானந்தவுக்கு எதிராக சீறிப் பாய்கின்றார் சஜித்

*கொழும்பு, ஜூன் 19*
'தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்றி
பக்.2

## ஆணைக்குழுவில் ரிஷாத் முன்னிலை

*கொழும்பு, ஜூன் 19*
முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாகினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே ரிஷாட் பதியுதீன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார். (ம)

## அக்கராயன் மருத்துவமனை முன்பாக இன்று போராட்டம்

*கிளிநொச்சி, ஜூன் 19*
அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையை கொரோனா மருத்துவமனையாக மாற்றவேண்டாம் எனவும் பொருத்தமான மருத்துவமனையைத் தெரிவுசெய்யுமாறு கோரியும் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையை வடமாகாண கொரோனா மருத்துவமனையாக மாற்றவேண்டாம் என்று அண்மையில் 20 அமைப்
பக்.2

## இலங்கையின்...

இலங்கையின் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ளன.
எதிர்வரும் ஜூன் 26ஆம் திகதி சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை கடைப்பிடிக்கும் முகமாக இரு அமைப்புகளும் இலங்கையின் சித்திரவதை வரைபடத்தை வெளியிட்டுள்ளன.
இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்களைச் சித்திரவதை செய்வதற்காக கடந்த மூன்று தாசப்தகாலமாக இராணுவத்தினரும், கடற்படையினரும், பொலிஸாரும், படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களும் பயன்படுத்தும் 219 இடங்கள் அடங்கிய வரைபடத்தை குறித்த அமைப்புகள் வெளியிட்டுள்ளன. எனினும் இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகளின் முழுமையான அளவை இந்த வரைபடம் வெளிப்படுத்தவில்லை எனவும் குறித்த இரு அமைப்புக்களும் குறிப்பிட்டுள்ளன.
மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடமும், லேக்ஹவுசின் கட்டடமொன்றும் சித்திரவதைக் காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் பல பாடசாலைகளும், கல்லூரிகளும், பயிற்சி நிறுவகங்களும் தொழிற்சாலைகளும் பண்ணைகளும், சினிமா அரங்குகளும், கோல்விடல்களும் சித்திரவதைக் காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் இந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன. (க)

## இராணுவ மயமாக்கலால்...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை மத்திய வங்கியின் அலுவலர்களுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பில் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்வைக்குமாறு உத்தியோகத்தர்களைக் கடுந்தொனியில் அறிவுறுத்தினார். இத்தகைய பின்னணியிலேயே மங்கள சமரவீர இதுகுறித்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாட்டின் பொருளாதார சீர்குலைவுக்கு ஜனாதிபதி மத்திய வங்கி மீதும், கொரோனா வைரஸ் பரவல் மீதும் குற்றஞ்சுமத்துகின்றார். ஆனால், உண்மையில் கடந்த 7 மாதங்களாக சீராக ஒழுங்கமைக்கப்படாத நிதிக்கொள்கை மற்றும் தவறான பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றின் விளைவே இந்த பொருளாதாரச் சீர்குலைவாகும். குறிப்பாக இந்த நெருக்கடியைத் தூண்டியது டிசெம்பர் 19ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திட்டமிடாத வரி இடைநிறுத்தங்களேயன்றி கொரோனா அல்ல.
இதேவேளை, முதலீடுகள் தேவை என ஜனாதிபதி கூறுவது மிகவும் சரியானதே. இன்றவளவில் ஜனநாயகம், சுதந்திரமான நீதித்துறை மற்றும் சட்டத்திற்கு அமைவாக இயங்கக்கூடிய சூழ்நிலை என்பனவே முதலீட்டாளர்களைக் கவர்ந்துகொள்வதற்கு அவசியமேயன்றி எதேச்சதிகாரம், இராணுவமயமாக்கல் மற்றும் முதலாளித்துவம் என்பவை அல்ல - என்றார். (ம)

## மின்சாரம் தாக்கி...

சட்டவிரோத மின் கம்பியில் சிக்கி வயோதிபத் தம்பதியர் இருவரும் உயிரிழந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. உயிரிழந்தவர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 68 வயதான கணவரும், 62 வயதான அவரது மனைவியுமே உயிரிழந்துள்ளனர். (ம)



## 10 பேருக்கு...

வேலை வாய்ப்புக்காக டுபாய் நாட்டிற்கு சென்று தங்கியிருந்தவர்களில் 290 பேர் நேற்று சிறப்பு விமானத்தின் மூலம் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 168 பேர் வவுனியா வேலங்குளம் விமானப்படைத் தளத்தில் உள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களில் சிலரிடம் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனை முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன. அதில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 10 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம18,110)

## எம்.பிக்களில்...

யில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்தால் கதை அவ்வளவுதான் இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சன் ராமநாயக்க.
நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை பெற்ற 100 பேர், மணல் அகழும் அனுமதியை பெற்ற 75 பேர், போதைப்பொருளை கடத்தி வரும் இரண்டு பேர் எனச் சமூக விரோதச் செயற்பாட்டில் ஈடுபடும் பலர் இருந்துள்ளனர். இதுவே நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு வந்தவர்களின் தகுதி. இவ்வாறான நிலைமையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை சிலர் கோருகின்றனர். அதிகாரம் இல்லாத போதே இவர்கள் இப்படிச் செய்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்கினால் என்ன நடக்கும்? - என்றார். (ம)

## சர்வதேச சூழ்ச்சியே...

னர். எனினும் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முடிந்தபாடில்லை - என்று தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுத்தேர்தலில் 'நல்லாட்சி' அரசின் உறுப்பினர்கள் முன்னெடுக்கும் தேர்தல் பரப்புரை குறித்து மக்கள் அதீத கவனம் செலுத்த வேண்டும். போலியான வாக்குறுதி, பலவீனமான அரச நிர்வாகம் ஆகியவை கடந்த அரசின் பெறுபேறு.
அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு எதிர்த்தரப்பினர் எமது செயற்பாடுகளை நாடாளுமன்றத்தில் பலவீனப்படுத்தினார்கள். இவ்வாறான நிலைமைகள் பொதுத்தேர்தலின் ஊடாக திருத்தப்படும்.
நல்லாட்சி அரசின் ஆட்சியில் மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எமது போராட்டத்தின் வெற்றியாகும். அரசியல் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபை தேர்தல்கள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. பொதுத்தேர்தலைப் பிற்போட எதிர்த் தரப்பினர் முன்னெடுத்த சூழ்ச்சி நீதிமன்றத்தால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.
உள்ளூர் மற்றும் சர்வதேச தரப்பின் அரசியல் சூழ்ச்சியின் விளைவாகவே 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பயனை மக்கள் பெறவில்லை. 2019ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் மீண்டும் மாற்றம் ஏற்பட்டது. இருப்பினும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிரான தவறான குற்றச்சாட்டுக்கள் முடிவடையவில்லை - என்றார். (ம)

## அக்கராயன் மருத்துவமனை...

புகள் இணைந்து மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மனுவொன்றைக் கையளித்திருந்தன. ஆனால் இதுவரைக்கும் எந்தப் பதிலும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் பிரதேச அமைப்புகள் இணைந்து இன்று கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டன. (ம-214)

## அடுத்த வாரம்...

கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து நாடு படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் திரையரங்குகள் அனைத்தையும் எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் மீண்டும் திறக்க முடியும் என்று கலாசார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. சமூக இடைவெளி, தொற்று நீக்கல் நடவடிக்கை உள்ளிட்ட இறுக்கமான பொறிமுறைகள் பேணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)



## வாரம் ஒருநாள்....

தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரசன்ஸ.
இது தொடர்பில் அமைச்சர் விமல் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அலுவலர்களும் வாரத்தில் ஒருநாள் கட்டாயம் 'பற்றிக்' ஆடைகளை அணிய வேண்டும் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உள்நாட்டு கைத்தறி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது - என்றார். (ம)

## இயலாமையை மறைக்கவே...

றனற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன்படுத்தப்படுகின்றது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயம் செய்யப்பட்டது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வெளியிட்ட கருத்தையடுத்து பெரும் சர்ச்சையொன்று கிளம்பியிருக்கும் நிலையில், எவ்வித ஆதாரங்களுமின்றி அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு கண்டனங்களும் வலுத்து வருகின்றன.
இந்தநிலையில், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்குக் கண்டனம் வெளியிட்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ருவிட்டர் பக்கத்தில் இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:
'தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்றினற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது.
2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் தமது திறமையை நிரூபித்த சிறந்த கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் மீது இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக்கூடாது. அவர்களுடைய அர்ப்பணிப்பான சேவைக்கும், அவர்கள் நாட்டுக்குப் பெற்றுத் தந்தவற்றுக்கும் உயர்வாக நடத்தப்படும் தகுதியை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். (ம-22)

### இரணைமடு முகாமிலிருந்து

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து 71 கடற்படையினர் வெளியேறினர்!

கிளிநொச்சி, ஜூன் 19
கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமிலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவுசெய்துகொண்டு 71 கடற்படையினர் இன்று வெளியேறியுள்ளனர். கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமுக்கு வெலிசர கடற்படை முகாமில் இருந்து கடந்த மாதம் 20ஆம் திகதி 167 சிப்பாய்கள் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களில் 70 பேர் தனிமைப்படுத்தலை முடித்துக்கொண்டு ஏற்கனவே வெளியேறிய நிலையில், மேலும் 71 பேர் இன்று வெளியேறினர். தனிமைப்படுத்தலுக்காக அழைத்துவரப்பட்ட கடற்படையினருக்கு பி.சி.ஆர்.பரிசோதனையில் நோய்த் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் கடந்த 06.06.2020 அன்று 70 பேர் தனிமைப்படுத்தல் நிறைவுசெய்து வெளியேறியுள்ளார்கள். எஞ்சியுள்ள 26 பேரில் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 22 பேருக்கு பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-214)

### லசந்த விக்ரமதுங்கவின் கொலை வழக்கு

# சி.ஐ.டியின் இயக்குநரான அல்விஸை கைதுசெய்க!

### அகிம்சா விக்ரமதுங்க காட்டம்

கொழும்பு, ஜூன் 19
சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாக சி.ஐ.டி.யின் புதிய இயக்குநருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் உள்ளன என்று லசந்த விக்ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்ரமதுங்க தெரிவித்துள்ளார். அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அவர் கடிதமொன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,
எனது தந்தை லசந்த விக்ரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அத்திடியவில் கொலை செய்யப்பட்டார். அவரது கொலை குறித்து சி.ஐ.டி.யினர் விசாரணைகளை முன்னெடுத்தனர். 2010ஆம் ஆண்டில் பயங்கரவாத விசாரணை பிரிவின் (ரி.ஐ.டியின்) பொறுப்பதிகாரியாக காணப்பட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்விஸ் எனது தந்தையை கொலை செய்தவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக ஆதாரங்களை மறைத்தார். சந்தேகநபர்களை காப்பாற்றினார் என 2019ஆம் ஆண்டு ஒக்டோபரில் சி.ஐ.டி.யினர் கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். இவ்வாறான குற்றங்களிற்கு ஏழு வருட சிறைத்தண்டனையை வழங்கலாம். இதனைத் தொடர்ந்து பதில் பொலிஸ் மா அதிபர் அல்விஸை கைதுசெய்து நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பதில் பொலிஸ்மா அதிபர் திடீரென தனது மனதை மாற்றிக் கொண்டார். சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்விஸ் அதன் பின்னர் கைதுசெய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுமில்லை.
மாறாக மே 21ஆம் திகதி சி.ஐ.டி.யின் புதிய இயக்குநராக அல்விஸை நியமிப்பதை அங்கீகரிக்குமாறு அரசு விடுத்த வேண்டுகோளினை தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது.
சி.ஐ.டி.யின் இயக்குநரின் பதவியிலிருந்து அல்விஸை நீக்கி அவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு நான் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை கேட்டுக்கொள்கின்றேன். அல்விஸ் கைதிலிருந்து தப்புவதற்கும் சி.ஐ.டி. யின் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் பதில் பொலிஸ்மா அதிபர் எந்த வகையில் உதவினார் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்' என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (ம)

# சஹ்ரான் குழுவோடு ரியாஜுக்கு தொடர்பு



கொழும்பு, ஜூன் 19
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரரான மொஹமட் ரியாஜ் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குண்டுதாரிகளுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனரத்ன தெரிவித்தார். தொலைக்காட்சி ஒன்றுக்கு இன்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். குறித்த நபர் குண்டுதாரிகளுக்கு போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்திருந்தமை விசாரணைகளில் தற்போது தெரியவந்துள்ளது - என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனரத்ன மேலும் தெரிவித்தார். (ம)

## புதினம் ? தெரியுமோ

பக்கம் கேடயம் எண்டு பலமான 2 தரப்புகளோடு முட்டி மோதியே வாக்குச் சேகரிக்க வேண்டிய நிலை.அதிலும் கேடயம் அணியினர் சுயேச்சைக் குழுவாக இருந்தாலும், வீணையில் இருந்து பிரிந்து சென்றவரே அந்தக் கட்சி தொடங்கியிருந்ததால், வழக்கமாக அவர்களுக்கு (வீணைக்கு) விழுந்த வாக்குகளில் கணிசமானவை கேடயத்துக்கு போகக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதேபோன்று கைச் சின்னத்தினரும் அதிகாரம், ஊடகப்பலம் என்று இன்னொரு பக்கமாக வாக்குகளைப் பிரிக்கப்போகிறார்கள். ஆக , மொத்தத்தில் இப்படிப் பிரிந்து செல்லும் வாக்குகளால் 'ஒரு ஆசனம் நிச்சயம்' என்ற வீணைக் காரர்களின் வழக்கமான நிலை இந்த முறை கேள்விக்குறியாக மாறியுள்ளது. இதனால் அந்தக் கட்சியினரைத் தீயாக வேலை செய்து , வழக்கமான ஒரு ஆசனத்தையாவது உறுதிசெய்யுமாறு தலைமையிடமிருந்து கட்டளை பறந்துள்ளதாம்.
ஆனாலும் அது சகவேட்பாளர்கள் கேட்பதாயில்லை. அண்மையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி வேட்பாளர், சுகாதார நடைமுறைக்கு மாறாக பரப்புரை செய்தபோது, அங்குகூடியவர்களில் 14 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போது, அவர்களை அம்போ என்று விட்டு விட்டு குறித்த வேட்பாளர் நழுவியிருந்தார். இது அந்தக் கட்சியின் ஆதரவாளர்களிடையே பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது, அதேபோன்று கிளிநொச்சியில் இருந்து இறக்கப்பட்டிருக்கும் வீணைக் கார பெண் வேட்பாளர் பற்றியும் முன்னுக்குப் பின் முரணான அறிமுகத்தைக் கொடுத்து , கட்சியின் மீதான நம்பிக்கையீனத்தை அதிகமாக்கி வருகிறார்கள். குறித்த பெண் வேட்பாளர் செஞ்சோலையில் வளர்ந்தவர் என்று அனுதாப வாக்கைத் தேட முயற்சித்து,. பின்னர் அது பொய்யென்று மக்களுக்குத் தெரிந்ததும் செந்தளிரில் வளர்ந்தவர் என்று சமாளிக்கப் பார்த்தார்கள். ஆனால் செந்தளிரோ பிள்ளைகளைப் பகல்வேளையில் பராமரிக்கும் காப்பகமே தவிர செஞ்சோலை போன்று அங்கேயே பிள்ளைகள் முழுமையாகத் தங்கிப் படிப்பதில்லை. இப்படி எல்லா ராஜதந்திரங்களும் வீணாகிக் கொண்டிருப்பதால், எப்படி அந்த ஒரு ஆசனத்தை இந்தமுறை எடுப்பது என்று தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கின்றனர் வீணைக்காரர்கள்.

### கொரோனாவால்

# இலங்கையர்கள் 21பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 19
கொரோனா தொற்றுக்கு இலக்காகி, வெளிநாடுகளில் பணியாற்றும் 21 இலங்கையர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர்.
மார்ச்மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கை பணியாளர்களான 21 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.
இதேவேளை மத்திய கிழக்கு, கிழக்காசியாவைச் சேர்ந்த 17 நாடுகளில் தொழில் நிமித்தம் சென்ற இரண்டாயிரம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (க)

# கொரோனாவால் திரும்பிய மாலுமி

கொழும்பு, ஜூன் 19
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்ட மாலுமி ஒருவர் நேற்று அதிகாலை கட்டார் நாட்டில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர் இந்திய நாட்டு மாலுமி எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 17ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மாலுமிகள் உட்பட 65 பேர் வருகைத்தந்தனர். அவர்கள் அனைவரும் கப்பல்களில் சேவையாற்றுபவர்கள். அவர்களில் 15 பேர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக கட்டாருக்குச் சென்றுள்ளனர். அவ்வாறு சென்ற 15 பேரில் ஒருவருக்கு கொரோனா தொற்றியுள்ளதாக டோஹாவில் மேற்கொள்ளப்பட்ட பி.சிஆர் பரிசோதனையில் உறுதியானது. அதற்கமைய அவர் அந்த நாட்டுக்குச் சென்ற விமானத்திலேயே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். (ப)

# தொழிற்பயிற்சி நிலையங்கள் ஜூலை 6 முதல் மீள இயங்கும்

கொழும்பு, ஜூன் 19

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த தொழிற்பயிற்சி நிலையங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

50க்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட தொழிற்பயிற்சி நிலையங்களே முதலில் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சு தெரிவித்துள்ள பாதுகாப்பு முறைமைகளுக்கு அமைய இந்த நிறுவனங்கள் மீளத் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(எ-ரி1)

### அலைவரிசை தெளிவின்மையால்

# 'சூம்' செயற்றிட்டத்தில் கற்க மாணவர் சிரமம்

தென்மராட்சி, ஜூன் 19

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட கரணவாய் வடக்கு மற்றும் கரணவாய் வடமேற்கு ஆகிய பிரிவுகளில் உள்ள மாணவர்கள் தற்போது கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் 'சூம்' செயற்றிட்டத்தை அலைபேசிகளில் பார்ப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என அந்த மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.

இந்தப் பிரிவுகளை அண்டியுள்ள சுற்றுவட்டத்தில் குஞ்சர்கடையடி, கலட்டி, வல்வெட்டித்துறை, இமையாணன் போன்ற இடங்களில் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ள நிலையிலும் கரணவாய் வடக்கு, வடமேற்கு ஆகிய பகுதிகளில் அலைபேசிகளின் வைபர் மற்றும் வாட்ஸ் அப் போன்றவை தெளிவற்ற நிலையில் காணப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் பாடத்திட்டம் ஒளிபரப்பாகும் போது இப்பகுதியில் தெளிவின்மை காரணமாக வேறு இடங்களுக்குச் சென்று பாடத் திட்டங்களை கற்க வேண்டியுள்ளதெனவும் தெரிவித்தனர்.

குறித்த கோபுரங்களுக்கு உரிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் அதன் விசையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். (ஐ-9)

# அக்கரைப்பற்று விபத்தில் ஒருவர் சாவு இருவர் காயம்

அக்கரைப்பற்று, ஜூன் 19

அக்கரைப்பற்றில் நேற்று வியாழக்கிழமை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர். பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியின் சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள வளைவில் இந்த விபத்து நடந்துள்ளது.

பொத்துவில் பிரதேசத்திலிலிருந்து சம்மாந்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள வளைவில் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதி ஓரங்களில் நடப்பட்டிருக்கும் வீதி பாதுகாப்பு கட்டைகளையும் உடைத்துக்கொண்டு அருகில் உள்ள சிறிய பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-ரி1)

# அம்பலாங்கொடைக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 19

அம்பலாங்கொடையில் கொரோனா தொற்று பரவ வாய்ப்பு உள்ளதால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தீவிரமடைந்துள்ள பிராந்திய நாடுகளிலிருந்து நோயாளர்கள் இலங்கைக்குள் நுழைய முயற்சிக்கிறார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

மீன்பிடிப் படகுகள் மூலம் இந்தியா உட்பட ஏனைய நாடுகளில் இருந்து அம்பலங்கொடைப் பகுதிக்குள் நுழையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்காக மீனவர்களை தெளிவுபடுத்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அம்பலங்கொடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்ட ரீதியாக வர முடியாத இந்தியா உட்பட நாடுகள் பலவற்றின் கொரோனா தொற்றாளர்கள் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி கடலுக்குச் செல்லும் இலங்கை மீனவர்களை ஏமாற்றி நாட்டுக்குள் நுழைய முயற்சி செய்கின்றனர் எத்தகவல் வெளியாகியுள்ளது.

அந்தத் தகவலுக்கமைய இந்த சிவப்பு எச்சரிக்கை விடுப்பதற்கு அம்பலங்கொடைப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு வேறு நாடுகளிலிருந்து சட்ட விரோதமாக உள்நுழைபவர்களால் மீண்டும் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. (க)

# மின்சாரப் பட்டியல் சிக்கல்: விளக்கம் கோரிய ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 19

கடந்த சில மாதங்களாக மின்சாரப் பட்டியலில் காணப்படும் சிக்கல் நிலைமைகள் தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விளக்கம் கோரியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இது தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார். மக்களுக்கான மின்சார நிவாரணம் உரிய முறையில் சென்றடைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா நிலைமைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்திய இலங்கை மின்சார சபைத் தலைவர் விஜித ஹேரத், வாடிக்கையாளர்களுக்கு சரியான மின்சாரப் பட்டியலே வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

# 42,000 பொதிகளில் அழிந்துள்ள முகவரிகள்!

கொழும்பு, ஜூன் 19

மலேசியாவிலிருந்து அனுப்பப்பட்ட 42 ஆயிரம் தபால் பொதிகளில் முகவரிகள் அழிந்துள்ளன. அதனால் அவற்றை இலங்கையில் உரியவர்களிடம் ஒப்படைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஒன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய தபால் பொதிகளிலேயே இவ்வாறாக முகவரிகள் அழிந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை விமானம் மூலம் அனுப்பப்பட வேண்டிய பொருள்கள். எனினும் கடந்த மாதங்களாக விமான சேவைகள் இடம்பெறாத காரணத்தால் அவை கொள்கலன் மூலம் கப்பலில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இவற்றைக் கப்பலில் கொண்டு வரும்போது நீரால் அவற்றின் முகவரிகள் அழிந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் முடிந்தளவு அவற்றில் காணப்படும் முகவரிகளைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.(க)



# கிரான் பாலத்தை திருத்தக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான் பாலத்தை மீள சீரமைத்துத்தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிரான், புலிபாய்ந்தகல், பொண்டுகச்சேனை, மியாங்குளம் போன்ற வீதிகளை ஊடறுத்துச் செல்லும் கிரான் பாலம் நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் மிக மோசமான நிலையில் காணப்படுகிறது.

இரண்டு வாகனங்கள் சமாந்தரமாகச் செல்ல முடியாத நிலையில் உள்ள இந்த பாலத்தில் அடிக்கடி விபத்துகள் இடம்பெறுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் சீரமைப்புத் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், மட்டக்களப்பு மாவட்டச் செயலர், கிரான் பிரதேச செயலர் ஆகியோர் கவனத்தில் கொண்டு திருத்தியமைக்க முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-46)

# சூக்காவுக்கு எதிராக சர்வதேச முறைப்பாடு

## புலனாய்வுத்துறை பணிப்பாளர் சுரேஸ் சால்லே மேற்கொண்டார்

கொழும்பு, ஜுன் 19

இலங்கையின் தேசிய புலனாய்வுத்துறை பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சால்லே, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பணிப்பாளர் யஸ்மின் சூக்காவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிலும், ஐரோப்பிய ஒன்றியத்திலும் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

என் மீது அவதூறான குற்றச்சாட்டை சுமத்தியமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்துள்ளேன். அண்மையில் யஸ்மின் சூக்கா வெளியிட்ட குற்றச்சாட்டு, தனது கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தியிருப்பதுடன், தனது உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மேஜர் ஜெனரல் சால்லே சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்காக பல வேறு நிறுவனங்களும் நிதியுதவிகளை வழங்கிவருகின்றன. எனினும் இந்த நிதிகளை பயன்படுத்தி யஸ்மின் சூக்காவின் நிறுவனம் விடுதலைப்புலிகளின் அனுதாபிகளது நிகழ்ச்சி நிரல்களை மேம்படுத்த எத்தனிக்கிறது என்று சால்லே தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே தன்மீது சுமத்தப்பட்ட மனித உரிமைமீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்காக யஸ்மின் சூக்காவும், அவரின் நிறுவனமும் 10 பில்லியன் ரூபா நட்டஈட்டை வழங்க வேண்டும் என்று கோரி சால்லே சட்டக்கோரிக்கை கடிதத்தை அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பஸ் பயணிகளுக்கு கைபேசி செயலி!

கொழும்பு, ஜுன் 19

இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து பயணிகளுக்கு கைப்பேசி செயலி ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சில தனியார் பேருந்துகள் மந்தகதியில் பயணத்தில் ஈடுபடுகின்றமையால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியம் மற்றும் அதிக வேகத்தில் பயணிப்பதால் ஏற்படும் விபத்துகளை தவிர்ப்பதற்காகவும் பயணிகள் நேரத்தை சேமிப்பதற்காகவும் கைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதற்கமைய கைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. பயணிகள் போக்குவரத்து சேவையை துரிதப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்காகவும், பேருந்து வரும் வரையில் காத்திருக்காமல் பேருந்து வருகிறதா, இல்லையா, தாம் பயணிக்க எதிர்பார்த்துள்ள நேரத்துக்கான பேருந்து எந்த இடத்தில் வந்து கொண்டிருக்கிறது என்பவற்றை அறிந்துகொள்வதற்காகவும் இந்த செயலி மூலம் வசதி செய்து கொடுப்பதே தமது நோக்கம் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-ரி1)

ஊடக அ.அட்டை விவகாரம்

# பாதுகாப்பு அமைச்சிடம் எந்தப் பொறுப்புமில்லை

## மறுக்கிறார் பந்துல



கொழும்பு, ஜுன் 19

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றேன் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் செயற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு தலையிடுகின்றது என்றும், அனைத்து விடயங்களும் இராணுவ மயப்படுத்தப்படுகின்றன எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். இதனை நான் முழுமையாக நிராகரிக் கின்றேன்.

தகவல் ஊடகத்துறை அமைச்சாலேயே ஊடகவியலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. இவ்விவகாரத்தைக் கையாள்வதற்கு அரச தகவல் திணைக்களம் இருக்கின்றது. எனவே, இப்பணியைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை. அவ்வாறு கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

எனவே, போலியான கருத்துகளை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (சு-44)



# கதிர்காம எசல உற்சவ அழைப்பிதழ் கையளிப்பு

கொழும்பு, ஜுன் 19

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் நாளைமறுதினம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கான அழைப்பிதழ் சம்பிரதாயபூர்வமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே தில்ருவன் ராஜபக்ஷவால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

# ஆஸியிலிருந்து 98 பேர் இன்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஜுன் 19

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஆஸ்திரேலியாவில் சிக்கியிருந்த 98 இலங்கையர்கள் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இலங்கை வந்தடைந்தனர். இவர்கள் மெல்போர்ன் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் ஆஸ்திரேலியாவில் உயர் கல்வியைத் தொடர்வதற்காகச் சென்ற மாணவர்களாவர். நாடு திரும்பியுள்ள அவர்கள் தற்போது பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை, அவர்களுக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல்களில் தற்காலிகமாகத் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

# மூன்று மாத மின் பாவனைக்கான ரூ. 2ஆயிரம் கோடி செலுத்தப்படவில்லை

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 19

கொரோனா தொற்றுக் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட 3 மாத காலத்தினுள் மின்சார சபைக்கு 2 ஆயிரம் கோடி ரூபா கிடைக்க வேண்டியுள்ளது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாவனையாளர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து இவ்வாறு கட்டணம் கிடைக்க வேண்டியுள்ளதோடு, கட்டண பட்டியல்கள் முறையாக வழங்கப்படாததும் மானி வாசிப்போர் வீடுகளுக்குச் செல்லாமையும் இதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

இருந்தபோதும் மின்சார சபை தொடர்ச்சியாக மின்சார வசதிகளை அளித்துவருவதோடு முறையாக மின்பட்டியல் விநியோகிக்கும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

மக்களின் பொருளாதார நிலைமை மற்றும் வருமான வழிகள் குறைந்துள்ள நிலையில் தவணை அடிப்படையில் கட்டணத்தை செலுத்த சலுகை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# போதை வியாபாரிகள் பணத்தில் குடும்பத்தைப் போஷிக்காதீர்கள்!

## சிறைச்சாலை அத்தியட்சகருக்கு பாதுகாப்புச் செயலர் அறிவுரை

கொழும்பு, ஜூன் 19

போதைப் பொருள் வியாபாரிகளின் பணத்தில் குடும்பத்தையும், பிள்ளைகளையும் போஷிக்க முயற்சிக்காது நேர்மையாகச் சேவைக் காலத்தை நிறைவு செய்ய வேண்டும் என்று சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன.

சிறைச்சாலை அத்தியட்சகர்களுடன் நேற்று வியாழக்கிழமை நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறைச்சாலைகளுக்குள் நடக்கும் மோசடி மற்றும் முறைகேடுகளைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சிறைச்சாலைகளுக்குள் நடந்த இப்படியான சம்பவங்களுக்கு உதவிசெய்த சில அதிகாரிகளுக்கு எதிராக ஏற்கனவே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளின் அதிகாரிகள் நாட்டின் முன்னணி போதைப் பொருள் வியாபாரிகளான வேலே சுதா, கஞ்சிபான இம்ரான் போன்றவர்களின் பணத்தில் தமது குடும்பம் மற்றும் பிள்ளைகளை போஷிக்க முயற்சிக்காது நேர்மையாக தமது சேவைக் காலத்தை பூர்த்திசெய்ய வேண்டும்.

சிறைச்சாலைகளுக்குள் கைதிகள் சரியான முறையில் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால், அதற்காக அரசு எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டத்தை உருவாக்கும்- என்றார். (ஏ-ரி1)

# 'கொக்கரக்கோ'வால் புகழ்பெற்ற சேவல் சாவு

பிரான்ஸ், ஜூன் 19



மொறிஸ் சேவலுடன் அதன் உரிமையாளர்

பிரான்ஸில் கொக்கரக்கோ சத்தத்துக்காக பெரும் சட்டச் சிக்கலில் மாட்டி உலகப் புகழ் பெற்ற சேவல் உயிரிழந்து விட்டது என்ற தகவலை அதன் உரிமையாளர் அறிவித்திருக்கிறார்.

மொறிஸ் என்று அழைக்கப்பட்ட ஆறு வயதான இந்தச் சேவல் கொரோனா முடக்க காலத்தில் நோய் வாய்ப்பட்டு உயிரிழந்தது என்ற செய்தியை தாமதமாக இப்போது வெளியிட்டிருக்கிறார் அதன் உரிமையாளர்.

பிரான்ஸின் மேற்குக்கரை பிராந்தியமான செரன்டி மரிரைம் (CharenteMaritime) பகுதியோடு இணைந்த தீவில் உள்ள கிராமத்து வீட்டில் உரிமையாளருடன் வாழ்ந்த மொறிஸ், விடி காலை வேளைகளில் வழமையாக எழுப்பும் கொக்கரக்கோ சத்தத்தைச் சகிக்காத அயலவர் ஒருவர் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடினார். மொறிஸ் உரத்துக் கூவி ஒலி எழுப்பித் தொந்தரவு செய்வதாகக் கூறி அவர் வழக்குத் தொடர்ந்தார்.

கடந்த ஆண்டில் பெரும் சட்டச்சிக்கலாக மாறிய இந்தக் கொக்கரக்கோ விவகாரத்தில் முழு நாடும் மட்டுமன்றி உலக ஊடகங்களும் மொறிஸ் சேவலின் பின்னால் நின்று அதனை ஒரு கிராமப்புற ஹீரோவாக மாற்றி இருந்தன.

பிரான்ஸின் நகரங்களில் அடுத்தவருக்கு இடைஞ்சலாக சத்தங்கள் போடுவதைத் தடுக்க பல சட்டங்கள் உள்ளன. ஆனால் நகரங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கு வருவோர் இத்தகைய சட்டங்களை கிராமங்களிலும் எதிர்பார்த்து அயலவர்களுடன் முரண்படுகின்றனர்.

கிராமப்புற வாழ்வின் ஓர் அடையாளமாக வர்ணிக்கப்பட்ட மொறிஸ், பூர்வீக வாசிகளுக்கும் புதியவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளின் மையத்தில் விவாதப் பொருளாக மாறி ஊடகங்களில் முக்கிய இடம்பிடித்தது.

அயலவருக்கு இடைஞ்சலாக சத்தம் எழுப்புதல் தொடர்பான சட்டங்களின் கீழ் நடைபெற்ற நீண்ட வழக்கில் கடைசியில் மொறிஸ் வென்றது. அது வழமைபோன்று தொடர்ந்து சத்தம் எழுப்பிக் கூவுவதற்கு அனுமதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மொறிஸுக்கு ஆதரவான தீர்ப்பின் தொடர்ச்சியாக கிராமப் புறங்களின் வாசனைகள் மற்றும் ஒலிகளைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் இயற்கையின் ஒலிகளைப் பேணும் Patrimoine sensorial என்ற புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் நிறைவேற்ற வழிவகுத்தது.(ஐ)

# கஞ்சிப்பானவின் தந்தையை தாக்கியவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 19

பிரபல பாதாள உலகத் தலைவனாகக் கருதப்படும் கஞ்சிப்பான இம்ரான் என அறியப்படும் மொஹமட் நஜீம் மொஹமட் இம்ரானின் தந்தை மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில், அந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் மாளிகாவத்தை பொலிஸாருக்கு அனுமதியளித்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நெரங்சலா டி சில்வா இதற்கான அனுமதியை நேற்று வியாழக்கிழமை வழங்கினார். மாளிகாவத்தை, சத்தர்ம மாவத்தை அருகே முச்சக்கர வண்டியில் வந்த மூவரால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும், தாக்குதலில் படுகாயமடைந்துள்ள 65 வயதான, கஞ்சிபான இம்ரானின் தந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த நபரின் உடல் முழுவதும் வெட்டுக்காயங்கள் உள்ளன என்றும் அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)



# இரு வீடுகள் கையளிப்பு

திருகோணமலை, ஜூன் 19

கிராமத்துக்கு ஒரு வீடு எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் தலா ஆறு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இரு வீடுகள் பயனாளிகளிடம் நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சந்திவெளி மற்றும் ஐயங்கேணி ஆகிய பிரதேசங்களில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டன. நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்ததாவது:

இந்த ஆண்டுக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 344 கிராம அலுவலகர் பிரிவுகளிலும் இந்த இலவச வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்தில் ஆரம்பித்த இவ் வீட்டுத்திட்டப் பணிகள் தற்போது பூர்த்திசெய்யப்பட்டு திறந்து வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் வீடில்லாத மக்களுக்கே இந்த வீட்டு வசதி கிடைப்பதற்கு இன்றைய அரசு வழிசெய்திருக்கிறது. எதிர்காலத்திலும் வீடில்லாத மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# யாழில் மாடுகளை மோதியது ரயில்!

## ஒன்று சம்பவ இடத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற ரயில் இரு பசுமாடுகளை மோதித் தள்ளியுள்ளது. நாவலர் வீதிப் பகுதியில் இன்று நடந்த இந்தச் சம்பவத்தில் ஒரு பசுமாடு அங்கேயே உயிரிழந்துள்ளது. மற்றைய மாடு காயமடைந்தது. சம்பவ இடத்திற்கு வந்த யாழ் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், கால்நடை மருத்துவர்களான மாறன் மற்றும் பிரியந்தினி ஆகியோர் அப்பகுதி மக்களுடன் இணைந்து காயமடைந்த மாட்டை மீட்டு சிகிச்சை வழங்கினர். (ம-20)

# கொரோனா ஒழிப்புக்கு சீனா பாராட்டு

கொழும்பு, ஜூன் 19



இலங்கையில் கொவிட் 19க்கு எதிரான வேலைத் திட்டத்துக்கு சீன ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனா தூதுவருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையே ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-ரி2)

# பொருளாதாரத்தை மேம்படுத்த எமக்கு மத்திய வங்கியே தடையாக இருந்தது

## முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 'நல்லாட்சி' அரசில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியே தடையாக இருந்தது என்பது தற்போது புலப்பட்டுள்ளது இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உத்தரவிட்டு 24 மணித்தியாலத்துக்குள் வட்டிவீதத்தை குறைக்க முடியுமாக இருந்தால், அன்று நாங்கள் தெரிவித்தபோது மத்திய வங்கிக்கு ஏன் செய்யமுடியாமல்போனது எனவும் கேள்வி எழுப்பினார். நாட்டின் நிதி நிறுவனங்கள் தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் மத்திய வங்கிக்கே இருக்கின்



றது. அதேபோன்று ஆட்சியில் இருக்கும் அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்றவாறு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பும் மத்திய வங்கியிடமே இருக்கின்றது. அரசின் கோரிக்கைகளை மத்திய வங்கிக்கு நிறைவேற்ற முடியாது இருந்தால், அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரிந்துரைகளை அரசிடம் கேட்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் அரசு நிதி தொடர்பான நிவாரணங்களை மக்களுக்கு அறிவித்து அதனை வங்கிகள் செயற்படுத்த தவறினால் மக்கள் அரசையே குறை கூறுவார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் நான் நிதி அமைச்சராக இருந்து, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய பல முயற்சிகளை செய்தேன். ஆனால் அதற்கு மத்திய வங்கியிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக வியாபாரிகளுக்கு அரச வங்கிகளில் தற்போது இருக்கும் 14 வீத வட்டி வீதத்தை 5 வீதம்வரை குறைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். ஆனால் மத்திய வங்கி அதனைச் செய்யவில்லை. அவர்கள் எப்போதும் பணவீழ்ச்சி அதிகரிப்பதை பாதுகாக்கும் நடவடிக்கையை மாத்திரமே மேற்கொண்டு வந்தனர்.

ஜனாதிபதி மத்திய வங்கிக்கு கடுமையாக உத்தரவிட்டு 24 மணி நேரத்துக்குள் வட்டி வீதத்தை 4 வீதம்வரை குறைக்க முடியுமாக இருந்தால், அன்று நாங்கள் அதனை செய்யுமாறு தெரிவித்தபோது ஏன் செய்யவில்லை?. இப்போது எப்படி பணவீழ்ச்சியை கட்டுப்படுத்துவது?. வட்டி வீதத்தை 4 வீதம் வரை குறைக்கமுடியுமாக இருந்தும் அதனை மத்திய வங்கி செய்யாமல் இருந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது- என்றார். (ம)

# 15 வயதுச் சிறுமி கர்ப்பம் தந்தையும், தாயும் கைது

கொழும்பு, ஜூன் 19

15 வயது மகளை மூன்று மாதக் கர்ப்பிணியாக்கிய குற்றச்சாட்டில் 59 வயது தந்தையும், அதற்கு உடந்தையாக இருந்த 57 வயது தாயும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் உடுவெள்ள மோவில் தோட்டப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்தச் சிறுமி சில தினங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது அந்தச் சிறுமி மூன்று மாத கர்ப்பிணி எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் குறுந்து வத்தை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் மாணவியிடம் மேற்கொண்ட விசாரணையின் போது தனது கர்ப்பத்துக்கு காரணம் தனது நண்பர் ஒருவர் எனக் கூறியுள்ளார்

மாணவி கூறியதில் சந்தேகம்கொண்ட பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்த விசாரணைகளையடுத்தே தனது தந்தை தன்னை வல்லுறவுக்கு உட்படுத்தினார் எனவும் அதன் பின்னர் தொடர்ந்து தன்னுடன் அவ்வாறு நடந்து கொண்டார் எனவும் இவ்விடயம் தனது தாய்க்கும் தெரியும் என்றும் சிறுமி பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து சிறுமியின் தந்தையும், தாயும் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை கம்பளை மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ)

# குற்றங்களுடன் தொடர்புடையவர் கைது



கொழும்பு, ஜூன் 19

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று ராகமை பொலிஸார் தெரிவித்தனர். சபித்த எனப்படும் சபித்த தினேஸ் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் ராகமை தொடருந்து நிலையத்திற்கு அருகில் வைத்து அவர் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கைக்குண்டு, துப்பாக்கி, கேரள கஞ்சா போதைப்பொருள் ஆகியவற்றுடன் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு ராகமை பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றுக்காக கம்பஹா மேல் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-ரி1)

# குப்பைகளை உணவாக உட்கொள்ளும் யானைகள்!

திருகோணமலை, ஜூன் 19

திருகோணமலையில் கன்னியா பிரதேசத்தில் குப்பைகள் கொட்டும் தளத்தில் குப்பைகளை 42 யானைகள் உணவாக உட்கொள்ளும் பழக்கத்தை கொண்டுள்ளன என்று அந்தப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையின் நகர சபை, பிரதேச சபை, திருகோணமலை கடற்படை தளம் ஆகியவற்றிலிருந்தே இந்தக் குப்பைகள் நாளாந்தம் கொட்டப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. முப்பத்திரெண்டு ஏக்கர் நிலப்பரப்புடைய இந்த குப்பை கொட்டும் தளத்துக்கு நாளாந்தம் கொட்டப்படும் குப்பைகளை பிரித்து எடுக்கும் நடைமுறை யானது தற்போது பின்பற்றப்படுவதில்லை.

இந்தநிலையில், இவ்வாறு பிரிக்கப்படாத குப்பைகளை உணவாக உண்டு பழக்கப்பட்ட யானைகள் குப்பைகளோடு கலந்துள்ள பிளாஸ்டிக், ரப்பர், பொலித்தீன் போன்ற சமிபாடு அடையாத பொருள்களை உணவாக உட்கொள்வதை அன்றாடம் காணக்கூடியதாக இருப்பதாக அந்தப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த யானைகள் பலநேரங்களில் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கு புகுந்து சேதங்களை விளைவிக்கின்றன எனவும் பயன்தரும் மரங்களை அழித்து வருகின்றன எனவும் பிரதேசவாசிகள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர். (ஏ-ரி2)

# எட்டு கடற்படையினர் குணமடைவு

கொழும்பு, ஜூன் 19

கொரோனாத் தொற்றுக்குள்ளான எட்டு கடற்படையினர் பூரண குணமடைந்துள்ளனர்.

கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 756 ஆக உயர்வடைந்துள்ளது என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

(ஏ-ரி2)

# 1,000 ரூபா ஊதியம் வியாழனன்று பேச்சு

கொழும்பு, ஜூன் 19

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பான பேச்சு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் முன்னாள் மத்திய மாகாண அமைச்சருமான பொதுமக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்றது. பெருந்தோட்டத் துறையின் முக்கியஸ்தர்கள், பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரண, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இ.தொ. காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான், புதிய பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான், சிரேஷ்ட உறுப்பினரும் சட்டத்தரணியுமான இராஜதுரை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற இந்தப் பேச்சில் ஒரு சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது. அடுத்தகட்ட பேச்சு எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது - என்றார். (ம)






ஜோதிகா நடித்த 'பொன்மகள் வந்தாள்' படம் கடந்த மே மாதம் 29ஆம் திகதி நேரடி யாக அமேசான் பிரைம் தளத்தில் வெளி யானது. அதற்கு ரசிகர்களிடம் நல்ல வர வேற்பு கிடைத்து வருகிறது.

இந்நிலையில் அறிமுக இயக்குநர் ஈஸ்வர் கார்த்திக் இயக்கத்தில் கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'பெண்குயின்' 'பெண் குயின்' படம் இன்று அமேசானில் வெளியாகிறது.

சார்லி சாப்ளின் முகமுடி, கையில் குடை; குழந்தையைத் தாக்கும் காட்சியுடன் ஆரம்பிக்கிறது படம். ரிதம் (கீர்த்தி சுரேஷ்) நிறைமாத கர்ப்பிணிப் பெண். கணவன் கௌதம் (மாதம்பட்டி ரங்கராஜ்). ஆனால், அவளுக்கு ஏற்கனவே திருமணமாகி அஜய் (அத்வைத்) என்றொரு குழந்தை உண்டு. அந்தக் குழந்தை தொலைந்துபோனதால், முந்தைய கணவனுடன் (லிங்கா) மணமுறிவு ஏற்பட்டு, கௌதமைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறாள் ரிதம். இந்த நிலையில், பல வருடங்களுக்குப் பிறகு, குழந்தை அஜய் இவள் கண்முன் வந்து நிற்கிறான். ஆனால், எதையும் பேசும் நிலையில் அந்தக் குழந்தை இல்லை.

இந்த நிலையில், அஜய்யை கடத்தியவன் திரும்பத் திரும்ப, ரிதமை (கீர்த்தியை) யும் குழந்தையையும் நெருங்குகிறான். அந்தக் கடத்தல்காரன் யார், எதற்காக குழந்தையைக் கடத்துகிறான் என்பதுதான் இந்த த்ரில்லரின் மீதிக் கதை.

படத்தின் தொடக்கத்தில் நடக்கும் கொலை, இந்தக் கதைக்கான மனநிலையை அட்டகாசமாக ஏற்படுத்துகிறது. ஆனால், அந்தக் காட்சி முடியும்போது கொலைகாரன் குடையுடன் அருகில் உள்ள ஏரியின் தண்ணீரில் இறங்கி மூழ்கி மறையும்போதே, "ஒரு நல்ல எதிர்பார்ப்பு த்ரில்லரில் இப்படியெல்லாம் எமக்கு போக்குக்காட்டும் காட்சி வராதே" என யோசிக்க வைக்கிறது.

இந்தக் காட்சியை விட்டுவிட்டுப் பார்த்தால், முதல் பாதியில் மிக மெதுவாகத் தொடங்கி, சிறிது நேரத்துக்குப் பிறகு சூடுபிடிக்கிறது படம். அதற்கேற்றபடி கீர்த்தி சுரேஷின் நடிப்பும் சிறப்பாக அமைகிறது.

## ஒரு தாயின் பரிதவிப்பு



கனவுக் காட்சிகளை வைத்து அடிக்கடி பயமுறுத்துவது, எந்த இடத்துக்குப் போனால் ஆபத்து நிச்சயம் இருக்கும் எனத் தெரியுமோ, அந்த இடங்களுக்கு கர்ப்பிணிப் பெண்ணான ரிதம் தனியாகவே செல்வது போன்றவையெல்லாம் ஆயாசத்தை ஏற்படுத்துகின்றன.

படத்தின் பிற்பகுதியில், கடத்தல் காரன் என ஒருவரைக் கைதுசெய்கி றார்கள். அந்த நபர் காவல்நிலையத் தில் வைத்து, "ஒரு கதை சொல்லட்டா சார்?" பாணியில் கீர்த்தி சுரேஷிடம் விடுகதை போடுகிறார். அந்த நபருக்கு கடத்தல்காரனைப் பற்றி எப்படி இவ்வளவு விஷயம் தெரியும், அப்படி தெரியும் என்றால் முன்பே சொல்லாமல் விடுகதை போடுவது ஏன் என்ற கேள்விக ளுக்குப் பதில் இல்லை. அதுவும் அந்தக் கடத்தல்காரனின் வீட்டிலேயே மரண முகாம் நடத்தும் காட்சியெல்லாம் பல வருடங்க ளுக்கு முன்பே ஹாலிவுட் படங்களில் வந்தவை. தமிழிலும் பல படங்களில் வந்து விட்டவை.

உண்மையான கடத்தல்காரர் என்று யாரை வேண்டுமானாலும் கொண்டுவந்து நிறுத்தி, இவர்தான் குழந்தையைக் கடத்தினார் என்று சொன்னால் நாம் ஏற்றுக்கொண்டு, படம் முடிந்தால் சரி என்ற நிலைக்கு வந்துவிடும் போது, சம்பந்தமில்லாமல் ஒருவரை கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அந்த நபர், தான் இப்படி குழந்தையைக் கடத்தி வைத்ததற்கு ஒரு அபத்தமான காரணத்தைச் சொல்கிறார்.

கீர்த்தி சுரேஷ் மகாநதி திரைப்படத்தில் போல இந்தப் படத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்ப டுத்தியுள்ளார். நாயகியை மையமாகக் கொண்ட கதையிலும் தன்னால் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்த முடியும் என்பதை நிரூபித்துள் ளார். படத்தில் இடம்பெறும் அத்தனை கதாபாத்தி ரங்களும் அவர்களின் வேலையை கச்சிதமாக சிறப்பாக செய்து முடித்துள்ளனர்.

கார்த்திக் பழனியின் ஒளிப்பதிவும் சந்தோஷ் நாராயணனின் இசையும் படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது. படம் ஆரம்பத்தில் மெல்ல நகர்ந்தாலும் போகப்போக வேகமெ டுக்கிறது. ஆங்காங்கே வரும் டுவிஸ்ட்டுகள் படத்தை மேலும் சுவாரஸ்யமாக்குகின்றன. பெண்களின் வலிமை அசாத்தியமானது, தாய் பாசத்திற்கு நிகர் எதுவும் இல்லை என்பதை கீர்த்தி சுரேஷின் கதாபாத்திரம் மூலம் அழுத்த மாக பதிவு செய்து இருக்கிறார் இயக்குநர் ஈஸ்வர் கார்த்திக்.

# விரைவில் 'கொரோனா குமார்'






கோகுல் இயக்கத்தில் விஜய்சேதுபதி நடித்து வெளியான படம் இதற்குத்தானே ஆசைப் பட்டாய் பாலகுமாரா. இந்தப் படம் 2013இல் வெளிவந்தது. அதில் விஜய்சேதுபதி, நந்திதா, சுவாதி ரெட்டி, அஸ்வின், பசுபதி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ரசிகர்களி டம் நல்ல வரவேற்பு இந்த படத்துக்குக் கிடைத்தது. இந்த நிலையில் இந்தப் படம் வந்து ஏழு வருடங்கள் கழித்து தற்போது அதன் 'ஸ்பின் ஆப்' படமாக 'கொரோனா குமார்' என்ற புதிய படம் உருவாக உள்ளது என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர்.

'ஸ்பின் ஆப்' எனப்படும் படங்கள் பொதுவாக ஹாலிவூட்டில் மிகவும் பிரபலமானவை. ஒரு கதையின் தொடர்ச்சியாக ஒரு புதுபடம் வருமானால் அதற்குப் 'ஸ்பின் ஆப்' என்று பெயர்.

'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படத்தில் வரும் ஒரு முக்கிய கதாபாத்திரம் 'கொரோனா லாக் டவுன்' நேரத்தில் சிக்கிக் கொண்டு என்னவெல்லாம் செய்கிறான் என்பது பற்றியது தான் படம் என இயக்குநர் கூறியுள்ளார். 'கொரோனா குமார்' படத்தில் யாரெல் லாம் நடிக்கிறார்கள் என்பது பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படத்தில் வரும் காமெடி தற்போதும் ரசிகர்கள் அதிகம் பேசப்படும் ஒன்று. குறிப்பாக "குமுதா ஹாப்பி அண்ணாச்சி" என்ன விஜய்சேதுபதி பேசும் வசனம் அதிகம் பிரபலம். தற்போது அதே கூட்டணி யில் ஒரு படம் உருவாகிறது என்கிற அறிவிப்பு ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த படத்தில் நடித்த பல நடிகர்கள் இந்த இரண்டாவது படத்திலும் நடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 19.06.2020 இல் வெளியிடப்பெற்றது.